

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, தமிழ்நாடு முழுவதும் குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா ஒரு கிலோ அரிசி, சர்க்கரை, ஒரு முழுக்கரும்பு ஆகிய பொங்கல் பரிசுத்தொகுப்புடன் ரூ.3 ஆயிரம் ரொக்கம் மற்றும் விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். இதன் தொடர்ச்சியாக கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் ஓசூர் மாநகராட்சி எஸ்.பி.எம். காலனி, மிடுகரபள்ளி ஆகிய இடங்களில் உள்ள ரேஷன் கடைகளில் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் ஒய். பிரகாஷ் பயனாளிகளுக்கு, பொங்கல் பரிசு தொகுப்பு, வழங்கினார். இதில், ஓசூர் மாநகர மேயர் சத்யா, மாநகராட்சி வரிவிதிப்புக்குழு தலைவர் சென்னீரப்பா, மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் ஞானசேகரன், பகுதி செயலாளர் ராஜா,மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சுமன் மற்றும் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்டம் 1வது மண்டலம் 3வது வட்டத்தை சார்ந்த குறிஞ்சி நகர், மாதேஸ்வரன் நகர், கலைஞர் நகர் ஆகிய பகுதிகளை சார்ந்த 51 குடும்பங்களுக்கு மண்டல தலைவர் ப.க.பழனிசாமி தலைமையில் மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம் முன்னிலையில் பட்டா வழங்கப்பட்டது. நிகழ்வில் மாவட்ட துணை செயலாளர் க.சின்னையன், 3வது வட்ட கழக செயலாளர் கருணாநிதி, மாணிக்கம், ராஜேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். பட்டா பெற்றவர்கள் தங்களது நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றிய தமிழக முதலமைச்சருக்கும், வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சருமான சு.முத்துசாமி ஆகியோருக்கு நன்றியை தெரிவித்தனர்.

### மீனவர் நலவாரிய உறுப்பினர் சேர்க்கைப் பணிகள் தொடக்கம்

# கழகத் தலைவரின் திட்டங்களால் மீனவர்கள் வாழ்வில் ஏற்றம்!

## கழக மீனவர் அணிச் செயலாளர் – மீனவர் நலவாரியத் தலைவர் அ.ஜோசப் ஸ்டாலின் பேச்சு!

குமரி, ஜன. 12–

கழகத் தலைவரின் ஆட்சியில் மீனவர்கள் வாழ்வில் ஏற்றம் தரும் வகையில் பல்வேறு வகையான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்தவகையில் மீனவர் நலவாரியத்தில் அதிக அளவிலான மீன்பிடித் தொழிலாளிகளை உறுப்பினராக சேர்க்க கழகத் தலைவர், முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருந்தார்.

அதன்படி, மீனவர் நலவாரிய உறுப்பினர் சேர்க்கையை கழக மீனவர் அணிச் செயலாளரும், தமிழ்நாடு மீனவர் நலவாரியத் தலைவருமான அ.ஜோசப் ஸ்டாலின் தீவிரமாக மேற்கொண்டு வருகிறார். இதற்கென தமிழகம் முழுவதும் 100 இடங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. 8 ஆம் தேதி முதல் தொடங்கிய இந்த முகாம், வரும் 31 ஆம் தேதிவரை நடக்கிறது.

தொடக்க நாளில் முட்டம், கடியப்பட்டிணம், குளச்சல், கோடிமுனை, இணையம், தேங்காய் பட்டினம், தூத்தூர், வள்ளவிளை ஆகிய மீனவ கிராமங்களில் உறுப்பினர் சேர்க்கையும், அது தொடர்பான விழிப்புணர்வு முகாமும் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பேசிய கழக மீனவர் அணிச் செயலாளரும், மீனவர் நலவாரிய தலைவருமான அ.ஜோசப் ஸ்டாலின், கடல் தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஒவ்வொருவரும், மீனவர் நல வாரியத்தில் உறுப்பினராக சேர வேண்டியது மிக,மிக அவசியம். தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தின் வாயிலாக பல்வேறு ஆக்கப்பூர்வமான பணிகள் நடைபெற்று வருகின்றன. அதையெல்லாம் மீனவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்றால் நலவாரியத்தில் உறுப்பினராவது மிகவும் அவசியம்.

மீன்பிடித் தொழில் என்பதே... இயற்கை சீற்றங்கள், மாறிவரும் கடல் காலநிலை, பருவநிலை மாறுபாடு உள்ளிட்ட பல்வேறு காரணங்களினால் மிகவும் அபாயம் கொண்டதாக உள்ளது. மற்ற தொழில்களை ஒப்பிடுகையில் கடல் தொழில் அதிகளவிலான ஆபத்துகள் நிறைந்தது. அதே நேரத்தில் நாட்டிற்கே அதிக அளவு அந்நிய செலவாணியை ஈட்டி தருவதில் மீனவர்களின் பங்களிப்பு முக்கியமானது.

எந்தச் சூழலிலும் கடல் அன்னை மீனவர்களை கண்ணின் இமைபோல் காப்பதைப் போல, கழகத் தலைவர், முதல்வர் அவர்களும் மீனவர்களுக்காக பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். ஐந்தாயிரம் ரூபாயாக இருந்த மீன்பிடி தடைக்கால நிவாரணத் தொகையை 8000 ரூபாயாக உயர்த்தியது முதல்வர் அவர்கள் தான். அந்தவகையில் மீனவ சமூகத்திற்கு முதல்வர் அவர்கள் தந்த திட்டங்கள் ஏராளம் என்பதையும் உங்கள் மத்தியில் சுட்டிக்காட்ட கடமைப்பட்டுள்ளேன்.



தலைவர் அவர்களின் பொற்கால ஆட்சியில் குமரிமாவட்ட கடற்கரை கிராமங்களின் பாதுகாப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளுக்காக மட்டும் 567 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. அண்மையில்கூட தேங்காய்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்தில் 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகள், கன்னியாகுமரி பெரியநாயகி தெரு மீனவ கிராமத்தில் 26 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தூண்டில் வளைவுடன் கூடிய மீன் இறங்குதளம் ஆகியவை அமைக்கப்பட்டு முதல்வரே காணொலி வாயிலாக திறந்துவைத்தார்.

இப்படி, கழக ஆட்சியில் மீனவர்களுக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டங்கள் குறித்தும் மீனவர்கள் ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும். கழக ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் குறித்து ஒவ்வொரு மீனவரும் சிந்தித்து எதிர்வரும் தேர்தல் காலத்தில் செயல்பட வேண்டும். என்று கூறினார்.

தொடர்ந்து கழக மீனவர் அணி செயலாளரும், தமிழ்நாடு மீனவர் நலவாரியத் தலைவருமான அ. ஜோசப் ஸ்டாலின் மீனவ கிராமங்களில், கழகத் தலைவர், முதல்வரின் உத்தரவின்படி, தமிழக அரசின் பொங்கல் பரிசுத் தொகுப்பு வினியோகத்தை தொடக்கி வைத்தார். அதில் பேசிய அ.ஜோசப் ஸ்டாலின், கழகத் தலைவர் அவர்கள் பொங்கல் பரிசுப் பொருட்களுடன், மூவாயிரம் ரூபாய் ரொக்கமும் வழங்கியுள்ளார். பொங்கல் பொங்குவது போல், இல்லம் எல்லாம் இன்பம் பொங்கட்டும். மீனவ மக்களுக்கு ஏராளமான திட்டங்களை வழங்கியுள்ள திராவிட மாடல் ஆட்சி தொடர்ந்திட, மீண்டும் 2.0 அமைந்திட மீனவர்கள் உறுதுணையாக இருக்க வேண்டும். என்று பேசினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்புகளுடன் ரூ. 3000 வழங்கும் திட்டத்தை தொடங்கியதை அடுத்து திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் பேரூராட்சியில் எஸ். கதிரவன் எம்.எல்.ஏ. குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பினை வழங்கினார்.உடன் ஒன்றிய செயலாளர்கள்,நகர செயலாளர்கள், கிளைச் செயலாளர்கள்,கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



சேலம் கிழக்கு மாவட்டம் அயோத்தியாப் பட்டணம் தெற்கு ஒன்றியம் மாசிநாயக்கன்பட்டி ஊராட்சி நியாய விலைகடை தமிழக அரசின் பொங்கல் தொகுப்பு மற்றும் ரொக்கம் 3000/ பொதுமக்களிடம் தெற்கு ஒன்றிய செயலாளரும், முன்னாள் ஒன்றிய குழு தலைவருமான ஏ. விஜயகுமார் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பேரூர் செயலாளர் பாபு மற்றும் ஒன்றிய நிர்வாகிகள், கூட்டுறவு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.


# மின் கழகத் தொ.மு.ச. மத்திய சங்கத் தேர்தல்

## தொ.மு.ச. பேரவை அறிவிப்பு

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை யில் இணைந்து செயல்பட்டு வரும் “தமிழ்நாடு மின் கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின்” (பதிவு எண் **38/CPT**, பேரவை இணைப்பு எண். 26) மத்திய சங்க நிர்வாகிகள் தேர்தலை நடத்திட பேரவை இணைப் பொதுச்செயலாளர் திரு. **ஜெ.விஜய குமார்** அவர்கள் தேர்தல் ஆணையாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். அதன்படி கீழ்க்கண்ட தேர்தல் அட்டவணையின்படி தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது.

**தேர்தல் கால அட்டவணை**

**மத்திய சங்க நிர்வாகிகள் தேர்தல்**

வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் – 10.01.2026 நண்பகல் 12.30 மணி

வேட்பு மனு படிவம் வழங்குதல் – 19.01.2026 காலை 11.00 மணி

வேட்பு மனு தாக்கல் – 20.01.2026 காலை 10.00 மணி முதல் நண்பகல் 12.30 மணி வரை

வேட்புமனு பரிசீலனை –20.01.2026 மதியம் 1.30 மணி முதல் மதியம் 3.00 மணி வரை

தகுதியான வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல் – 20.01.2026 மதியம் 3.30 மணி

வேட்பு மனு திரும்பப் பெறுதல்–20.01.2026 மதியம் 3.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை

இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல்–20.01.2026 மாலை 6.00 மணி

போட்டியிருப்பின் வாக்குப் பதிவு–25.01.2026 காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை

வாக்குப் பதிவு முடிந்தவுடன் வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

**குறிப்பு:–**

1)தேர்தல் நடைமுறைகளான வேட்பு மனு படிவம் வழங்குதல், வேட்பு மனுத்தாக்கல், வேட்பு மனு பரிசீலனை, இறுதி வேட்பாளர்கள் பட்டியல் வெளியிடுதல் உள்ளிட்டவை சென்னை அண்ணா சாலையில் உள்ள மின் கழக தொ.மு.ச. மத்திய சங்க அலுவலகத்தில் நடைபெறும்.

2)வாக்குப் பதிவு, வாக்கு எண்ணிக்கை, முடிவுகள் அறிவித்தல் ஆகிய பணிகள் திருச்சி பெல் தொ.மு.ச. அலுவலகத்தில் நடைபெறும்.

3) தேர்தல் விதிமுறைகள், வேட்பு மனு மற்றும் வேட்பாளர் கட்டணம் விபரங்கள் தேர்தல் ஆணையாளரால் தனியாக வெளியிடப்படும்.

**தேர்தல் ஆணையரின் முடிவே இறுதியானது.**

10.01.2026
இடம் : கலைஞரகம்

**மு.சண்முகம்**, Ex.MP
பொதுச்செயலாளர்,
தொ.மு.ச. பேரவை


### அ.நடராஜன் தலைமையில்

# பெரம்பலூர் மாவட்ட செயற்குழுக் கூட்டம்!

## மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் – – எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

பெரம்பலூர்,ஜன,12-

பெரம்பலூர் மாவட்ட செயற்குழு கூட்டம், பாலக்கரையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில்,மாவட்ட அவைத் தலைவர் அ.நடராஜன் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

இந்த கூட்டத்தில், மாநில வர்த்தக அணி துணை அமைப்பாளர் குன்னம் சி.இராஜேந்திரன், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர் கி.முகுந்தன், பட்டுச்செல்வி ராஜேந்திரன், செ.அண்ணாதுரை, டி.கே. ராமச்சந்திரன், ஆர்.முருகேசன்,

தொகுதி பார்வையாளர்கள் தங்க.சித்தார்த்தன், ஏ.கேஅருண், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர்,சன். சம்பத், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன்,

ஒன்றிய கழகச் செயலாளர்கள் எம்.இராஜ்குமார், செ.நல்லதம்பி, டாக்டர் செ.வல்லபன்,சி.ராஜேந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் ந. ஜெகதீஷ்வரன், அழகுநீலமேகம்,

பேரூர் கழகச் செயலாளர்கள் எம்.வெங்கடேசன், ஆர்.ரவிச்சந்திரன், செல்வலெட்சுமி சேகர், ஏ.எஸ். ஜாகிர்உசேன்,

முன்னாள் ஒன்றிய குழுத் தலைவர்கள் பிரபா செல்லப்பிள்ளை, க.ராமலிங்கம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன், துணை அமைப்பாளர்கள் வ.சுப்ரமணியன், ஆர்.அருண், மா.பிரபாகரன்,

மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தங்க.கமல், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் தி. இராசா, துணை அமைப்பாளர் ஜி.கே.மூர்த்தி,

மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் புஷ்பவள்ளி ராஜேந்திரன்,

மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ரமேஷ் ராஜேந்திரன், மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் அ.கருணாநிதி, தொ.மு.ச.கவுண்சில் பேரவை மாவட்ட தலைவர் கே.கே.எம்.குமார்,

தொ.மு.ச. மாவட்ட கவுன்சில் பேரவை செயலாளர் ஆர்.ரெங்கசாமி, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஆர். வேணுகோபால்,

மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் க.ரமேஷ், மாவட்ட விவசாய கூலித்தொழிலாளர் அணி அமைப்பாளர் ஏ. எம்.கே.கரிகாலன், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் சி.காட்டுராசா,

கலை இலக்கிய பேரவை மாவட்ட அமைப்பாளர் எம்.சுந்தர்ராஜ், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் இரா.ரமேஷ்,

மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எம்.மணிவாசகம்,

மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் எம். ரெங்கராஜ், மாவட்ட பிரதிநிதி எஸ்.அழகுவேல், வேப்பந்தட்டை கிழக்கு இளைஞர் அணி துணை அமைப்பாளர் ரா.சிவா மற்றும் இ.பி.கணேசன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

தமிழக பாரம்பரிய விழாவாகவும், உழைக்கும் விவசாய பெருங்குடி மக்களின் அறுவடைத்திருவிழாவாகவும் கொண்டாடப்பட்டு வருகின்ற பொங்கல் விழாவை அனைத்து ஒன்றியங்களிலும் சிறப்பாக கொண்டாடுவது எனவும்,

வருகிற 26.01.2026 அன்று தஞ்சையில் நடைபெறும் மகளிரணி டெல்டாமண்டல மாநாட்டில் பெரம்பலூர் மாவட்டத்தில் இருந்து திரளாக கலந்து கொள்வது எனவும்,

பொங்கல் விளை யாட்டுப் போட்டிகளை அனைத்து ஒன்றியங்களிலும் 3 இடங்களில் ஆண்களுக்கும், 3 இடங்களில் பெண்களுக்கும் நடத்துவது எனவும்,

அரசு ஊழியர்களின் 22 ஆண்டுகால ஓய்வூதிய கோரிக்கைகளை நிறைவேற்றிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்தும்,

தமிழர்களின் பாரம்பரிய விழாவான பொங்கலுக்கு, பொங்கல் தொகுப்புடன் பொங்கல் பரிசாக ரூ.3000/ வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்தும்,

20 இலட்சம் மாணவர்களுக்கு A1 தொழில்நுட்ப வசதியுடன் கூடிய மடிக்கணினி வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்தும்,

மொழிப்போர் தியாகி மூங்கில்பாடி வை.ரெங்கராஜ் மறைவிற்கும், ஒதியம் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் வைத்தியநாதன் மறைவிற்கும்,

ஆலத்தூர் கிழக்கு ஒன்றியம், தெரணி கிழக்கு கிளைக் கழக செயலாளர் அமுல்ராஜ் மறைவிற்கும்,

மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் தென்றல் ரவி தந்தை ரெத்தினசாமி மறைவிற்கும்,

ஆலத்தூர் கிழக்கு ஒன்றிய முன்னாள் அவைத்தலைவர் சி.கோபால் மறைவிற்கும்,

வேப்பந்தட்டை மேற்கு ஒன்றியம், தொண்டமாந்துறை ஊராட்சி, விஜயபுரம் கிளைச் செயலாளர் ராஜ் முகமது மறைவிற்கும்,

ஆலத்தூர் மேற்கு ஒன்றியம், கூத்தனூர் கிளைச் செயலாளர் செல்லதுரை மறைவிற்கும்,

ஆலத்தூர் மேற்கு ஒன்றியம், கண்ணாப்பாடி முன்னாள் கிளைச் செயலாளர் சரவணன் மறைவிற்கும் இரங்கல் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.



தருமபுரி அரசு கலைக்கல்லூரி கலையரங்கத்தில் ”உங்க கனவ சொல்லுங்க ” திட்ட துவக்க விழா நிகழ்ச்சி காணொலி காட்சி வாயிலாக ஒளிபரப்பபட்டது.இந்நிகழ்வில் தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ் மற்றும் தருமபுரி கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் வழக்கறிஞர்.ஆ.மணி எம்.பி. ஆகியோர் கலந்து கொண்டு, இத்திட்டத்தில் பங்கேற்றுள்ள தன்னார்வலர்களுக்கு தொப்பி மற்றும் கைபேசி இணைப்புகளை வழங்கினர்.உடன் தருமபுரி நகர மன்ற தலைவர் லட்சுமி மாது, மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா,வருவாய் கோட்டாட்சியர் காயத்ரி,நகர செயலாளர் எம்.பி.கௌதம் மற்றும் மகளிர் சுயஉதவி குழுவினர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



கோவை மாவட்ட கழக முன்னோடி துரை.தேவராசன் அவர்களின் 32 ம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு முன்னாள் அமைச்சர் பொங்கலூர் நா.பழனிச்சாமி தலைமையில் மாநகர் மாவட்ட பொறுப்பாளர் துரை.செந்தமிழ்செல்வன் முன்னிலையில் அவரது திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினர். இதில் கழக தொழில்நுட்ப அணி இணைச் செயலாளர் டாக்டர்.மகேந்திரன், சட்டத்துறை இணைச்செயலாளர் வழக்கறிஞர் கே.எம்.தண்டபாணி, மாவட்ட துணைச் செயலாளர் கல்பனா செந்தில், பொதுக்குழு உறுப்பினர்கள் வெநா.உதயக்குமார், மு.ம.ச.முருகன், புதூர் மணிகண்டன், கார்த்திகேயன் உள்பட பகுதி கழக பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.